



# ஹர ஹர சங்கரா

FREE COPY
Oct - 2024
Vol. 3 - ISSUE 13



# KODAMBAKKAM TIMES

SUSWAAD

**THE NAME FOR HIGH QUALITY TRADITIONAL SWEETS AND SAVOURIES**

3/2, Venkatraman Street, T. Nagar, Chennai - 600 017. Phone : 2815 5558, 2815 2678




# ITEMS AVAILABLE FOR DEEPAVALI

31.10.2024 (THURSDAY)

**Sales : Subject to Availability of Stocks only**

| | | | |
|---|---|---|---|
| Mixture | (மிக்சர்) | Diwali Marundhu | (தீபாவளி மருந்து) |
| Ribbon Pakoda | (ரிப்பன் பகோடா) | Laddu | (லட்டு) |
| Karasev | (காராசேவ்) | Badhusha | (பாதுஷா) |
| Kara Boondhi | (காராபூந்தி) | Athirasam | (அதிரசம்) |
| Thattai | (தட்டை) | Maa Laadu | (மாலாடு) |
| Thenkuzhal | (தேன்குழல்) | Okkarai, Other Traditional Sweets etc., | |

## BRANCHES

10/3, Madhans Apartments, Ground Floor
South Canal Bank Road, Opp. St. Johns School
Mandaveli, Chennai - 600 028.
Phone : 2495 0978 Cell : 99406 54138

No. 9/A, Kalinga Colony,
PT. Rajan Salai, K.K. Nagar, Chennai - 600 078.
(Opp. Sakthi Vinayakar Temple) Near Sivan Park
Phone : 2366 2300 Cell : 97899 76111

# 108 திவ்ய தேசத்தை சேவித்த பலன் கிட்டும் கோவில்

108 திவ்ய தேசத்தையும் ஆழ்வார்களே பார்க்கவில்லை என்று கூறுவர். சந்தர்ப்பம் இருந்தால், பணம் இருந்தால், நேரம் கிட்டினால்108 வைணவ தலங்களைச் சேவித்த பலன் உண்டு என ஒரு கோவில் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது அந்த கோவிலை சென்று தரிசியுங்கள். சிவன் ராமா ராமா ராமா என்ற நாமத்தை மூன்று முறை சொன்னால் விஷ்ணு சகஸ்ரநாமாவை சென்னபலன் கிட்டும் என்றும், ஆழ்வார்கள் நாராயணா என்றால் குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார் படும் துயரெல்லாம் நீக்கிடும் பெற்ற தாயினும் ஆயின செய்யும் என்று ஒரு நாமாவை சொன்னால் போதும் பல்லாயிரம் நாமங்கள் தேவையில்லை என்றார்கள்.

108 வைணவ தலங்களைச் சேவித்த பலன் உண்டு என கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அந்த ஸ்தலம் காட்டு மன்னார் குடி ஸ்ரீவீரநாராயணப் பெருமாள் (சிதம்பரம் அருகில்) கோவிலாகும்.

108 வைஷ்ணவ திவ்ய தேசங்களை தரிசிக்க ஒருவர் செல்லும் முன் முதலில் செல்லவேண்டிய ஸ்தலம். நம் நாதமுனிகளார் திருஅவதாரஸ்தலம். இது 108 வைஷ்ணவ திவ்ய தேசத்தில் ஒன்று அல்ல, ஆனால் அதனினும் பெருமைமிக்கது. நாலாயிரத் திவ்ய பிரபந்தம் கண்டெடுக்க வித்திட்ட ஸ்தலம் இது. எனவே இந்த தலத்தை முதலாவதாக தரிசித்துவிடுவது மிகவும் சிறந்தது. அதாவது பன்னிரு ஆழ்வார்கள் மகாவிஷ்ணுவைப் பற்றி மனமுருகி பாடிய பாடல்களின் தொகுப்பே நாலாயிர திவ்யப் பிரபந்தம் எனப்படும்.

அந்த நாலாயிர திவ்ய பிரபந்தத்தை சிதம்பரத்துக்கு அருகிலுள்ள காட்டுமன்னார்குடி (காட்டு மன்னார் கோவில்) குப்பங்குழியில் அவதரித்த நாதமுனிகள் ஒருநாள் தான் கேட்ட "ஆயிரத்துள் இப்பத்தும்" என்ற வரிகளை பாகவதர்கள் வாயால் கேட்டு, அதை உணர்ந்து தேடி இந்த நாலாயிர திவ்யப் பிரபந்தப் பாடல்கள் அனைத்தையும் குருகூர் சென்று தன் ஆழ்ந்த பக்தியால் நம்மாழ்வாரின் திருவருளால் மீட்டு நமக்கு வழங்கினார். அதன் பிறகே நமக்கு 108 திவ்யதேசத்தின் மகிமை தெரிந்தது.

நாலாயிர திவ்யபிரபந்தம் கிட்டவும் அதன் மூலம் இன்று நாம் சேவிக்க நினைக்கும் ஸ்ரீவைணவ 108 திவ்ய தேசங்களை தந்தருள காரணமான இக்கோவிலை, இவ்வூர் பெருமாளை சேவித்தால் 108 திவ்யதேச பெருமாளை சேவித்த பலன் உண்டு என்று கல்வெட்டு கூறுகிறது.



# நவராத்திரி

நவராத்திரி என்பது மக்கள் மகிழ்ச்சியுடன் துர்கா தேவியை வழிபடும் பண்டிகையாகும். இந்தியர்கள் இந்த பண்டிகையை மிகுந்த மகிழ்ச்சியுடனும், உற்சாகத்துடனும் கொண்டாடுகிறார்கள். மேலும் "நவ்" என்பதன் பொருள் ஒன்பது மற்றும் "ராத்திரி" என்பது இரவைக் குறிக்கிறது. இவ்வாறு ஒன்பது இரவுகளில் நாம் கொண்டாடுவதால் நவராத்திரி என்று பெயர் பெற்றது.

நாம் ஒன்பது இரவும், பத்து பகலுமாக திருவிழாவைக் கொண்டாடுகிறோம். திருவிழா அக்டோபர் அல்லது நவம்பர் மாதங்களில் நடக்கும். மேலும் இந்தியாவில் மக்கள் ஒவ்வெரு ஆண்டும் நான்கு முறை கொண்டாடுகிறார்கள். இந்த காலங்களை சாரதா நவராத்திரி, வசந்த நவராத்திரி, மக நவராத்திரி, ஆஷாட நவராத்திரி என்று குறிப்பிடுகிறோம்.

மிகவும் பிரபலமானது சாரதா நவராத்திரி ஆகும். இது நாடு முழுவதும் உள்ள மக்கள் தீவிரமாக கொண்டாடுகிறார்கள். வடகிழக்கு மற்றும் கிழக்கு மாநிலங்களில் வாழும் மக்கள் இதை துர்கா பூஜை என்று குறிப்பிடுகிறார்கள். புனித நூல்களின் படி மகிஷாசுரன் ஒரு அசுர ராஜா. மேலும் அவர் சிவபெருமானின் தீவிர பக்தராகவும், மகத்தான சக்திகளையும் பெற்றிருந்தார். அவர் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி பல தவறுகளைச் செய்து மக்களைத் தொந்தரவு செய்தார்.


You can advertise for your Rental, Real Estate, Situation Vacant etc.,

**KODAMBAKKAM TIMES**

**MAMBALAM & T NAGAR EDITION**

COVERING AREA : Choolaimedu, Kodambakkam, Mambalam & T Nagar

**K K NAGAR & VADAPALANI EDITION**

COVERING AREA :

Ashok Nagar, Ramapuram, Virugambakkam & Valasaravakkam

**Please contact : 8939070034**

**E-mail : kodambakkamtimes@yahoo.com**

அசுர ராஜாவிடம் இருந்து உலகைக் காக்க பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகளும் ஒன்றிணைந்து துர்கா தேவியை உருவாக்கினர். மும்மூர்த்திகளின் சக்தியோடும் அவர்களின் ஆயுதங்களுடனும் ஒன்பது பேராக அவதரித்த அன்னை ஒன்பது நாட்கள் போரிட்டு இறுதியில் மகிஷாசூரனை வீழ்த்தி வெற்றித்திருமகளாக திகழ்ந்தாள். சும்பன், நிசும்பன்களையும் அழித்து தர்மத்தை நிலைநாட்டுகிறாள்.

மகிஷாசுரனை அழிப்பதற்கு அம்பிகை அவதரித்தபோது தேவர்கள் தங்கள் சக்திகளை ஸ்ரீதேவியிடம் கொடுத்துவிட்டு பொம்மைபோல நின்றதை குறிப்பிடும் வகையில் கொலு அமைத்து வழிபாடு செய்யப்பட்டு வருவதாக கூறப்படுகிறது. அவளின்றி அணுவும் அசையாது என்பதை உணர்த்துவதே கொலு தத்துவம். அதனால்தான் ஓரறிவு உயிர்கள் முதல் அனைத்துக்கும் ஆதாரமான அம்பிகை வரையிலுமான பொம்மைகள் நவராத்திரி கொலுவில் இடம்பெறும்.

வடக்கு, மேற்கு மற்றும் தென் மாநிலங்களில் மக்கள் இந்த விழாவை ராம லீலா என்று குறிப்பிடுகிறார்கள். இதேபோல் இந்த பகுதிகளில் மக்கள் இதை தசரா என்றும் குறிப்பிடுகின்றனர். தசரா ராவணன் (அரக்கன்) மீது ராமர் பெற்ற வெற்றியின் அடையாளமாக அறியப்படுகிறது.

**ஒன்பது நாட்கள் கொண்டாட்டங்கள்**

துர்கா தேவியின் ஒன்பது அவதாரங்களுக்கு அர்ப்பணமாக இந்த திருவிழாவின் ஒன்பது நாட்களையும் கொண்டாடுகிறோம். முதல் நாள் பார்வதி தேவியின் அவதாரம். அதேபோல், மகாகாளியின் நேரடி அவதாரமாகவே இவளை சித்தரிக்கிறோம்.

இரண்டாவது நாளில் அவள் பார்வதி தேவியின் அவதாரம் ஆனால் அவளது திருமணமாகாத சுயத்தின் அவதாரம். நாளின் நிறம் நீலம் இது அமைதி மற்றும் வலிமையைக் குறிக்கிறது. அதேபோல மூன்றாம் நாளிலும் மஞ்சள் நிறம். இது பார்வதி தேவியின் விறுவிறுப்பைக் குறிக்கிறது.

குஷ்மாண்டா, நான்காவது நாள் பிரபஞ்சத்தின் படைப்பு சக்தியைக் குறிக்கிறது. எனவே பச்சை நிறம் இந்த வடிவத்துடன் தொடர்புடையது. மேலும் அவள் புலியின் மீது சவாரி செய்து எட்டு கரங்களுடன் காணப்படுகிறாள்.

ஐந்தாவது நாளில் சாம்பல் நிறம் மற்றும் அது வலிமையைக் குறிக்கிறது. அதன் பிறகு ஆறாம் நாள் நான்கு கரங்களுடன் அவள் சிங்கத்தின் மீது ஏறிச் செல்வது போல் சித்தரிக்கிறோம். மேலும், இந்த அவதாரம் தைரியத்தின் சின்னம். ஆறாவது நாளுக்கு ஆரஞ்சு நிறம்.

ஏழாவது நாள் மகாகாளி தேவியின் வடிவம். அந்த நாளின் நிறம் வெள்ளை அது அமைதியும், நம்பிக்கையும். எட்டாவது நாள் இளஞ்சிவப்பு நிறத்துடன் தொடர்புடையது.

இறுதியாக ஒன்பதாம் நாள் இயற்கையின் ஞானத்தையும் அழகையும் வெளிப்படுத்தும் தாமரையின் மீது அமர்ந்தாள். நிறம் வெளிர் நீலம் ஆகும்.

# பஞ்ச புராணம்



பஞ்சபுராணம் ஓதுவது என்பது சிவபெருமானின் புகழினைப் பாடும் திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோர்களின் தேவாரத்தின் ஏழு திருமுறைகளிலிருந்து ஒரு பாடலும், திருவாசகத்திலிருந்து ஒரு பாடலும், திருப்பல்லாண்டிலிருந்து ஒரு பாடலும், பெரியபுராணத்திலிருந்து ஒரு பாடலும் என ஐந்து பாடல்களை தேர்ந்தெடுத்துப் பாடுவது ஆகும். இதனை தோத்திரம் ஓதுதல் என்றும் குறிப்பிடுகின்றனர்.

**தேவாரம் :**

"தோடுடைய செவியன் விடையேறி ஓர் தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசி என் உள்ளம் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே"

**திருவாசகம் :**

"ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுள்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி"

**திருவிசைப்பா :**

"ஏகநா யகனை இமையவர்க்கு அரசை
என்னுயிர்க்கு அமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வணற்கு அருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்

# ASTROLOGY

## VASTU CONSULTANT

**PERFECT VASTU FOR HOME FACTORY OFFICE.**
**MANY CLIENTS BENEFITTED WITH VASTU PREDICTIONS WITH US.**
**ONLY WITH APPOINTMENT**

**94441 64859**

# ATHMA DIVINE CLUB



Since 1998

மாதம் தோறும் மகா பெரியவா
அனுசஷை யாத்திரை சங்கர மடம்
பெரியவா பிருந்தாவனம்,
ஓரிக்கை மணிமண்டபம், தேனம்பாக்கம்

4 நாள் பயணம்
நவம்பர் 2 முதல்
நைனிச்சாரிண்யம் மற்றும்
அயோத்தியா பயணம்

---

நவம்பர் 16 முதல் 22 வரை
காசி யாத்திரை
ஷ்ராத்தம் உள்ளப்பட

---

பிப்ரவரி 2025
இலங்கை ராமாயண
சுற்றுப்பயணம்

- 7 நாட்கள் யாத்திரை
- சொகுசு குளு குளு பயணம்
- நட்சத்திர தங்குமிடம்
- உயர்தர சைவ உணவு

**89396 56479**

யோகநா யகனை அன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே"

**திருப்பல்லாண்டு :**

மன்னுக தில்லை வளர்கநம்
பத்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே

**பெரியபுராணம் :**

"உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்பு அடி வாழ்த்தி வணங்குவாம்"

**கந்தபுராணம் :**

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்தவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

# முக்கியமான முருகன் கோவில் மலைகளின் படிகளின் எண்ணிக்கை

| | |
|---|---|
| **ஓதி மலை : 1880** | **பவள மலை : 200** |
| **சென்னி மலை : 1320** | **பொன் மலை : 200** |
| **மருதமலை : 837** | **பச்சை மலை : 180** |
| **பழனி மலை : 689** | **திண்டல் : 150** |
| **அனுவாவி : 500** | **கரட்டுமேடு : 150** |
| **சிவன் மலை : 496** | **குருந்தமலை : 108** |
| **திருத்தணி : 365** | **சுவாமி மலை : 60** |
| **விராலிமலை : 207** | **திருப்பரங்குன்றம் : 50** |

# தீபாவளி அமாவாஸ்யை

கு டந்தை சாரங்கபாணி கோயிலில் ராஜகோபுரம் இல்லாமல் மொட்டை கோபுரமாக இருந்த காலத்தில் லக்ஷ்மி நாராயணன் என்ற ஏழை பிரம்மச்சாரி தினமும் கோயிலுக்கு வந்து அமுதனை ஸேவித்துவிட்டு சிறு சிறு கைங்கர்யங்களை செய்து கொண்டிருந்தான்.

கோயில் மொட்டை கோபுரத்தை பார்க்கும் போதெல்லாம், தனக்குள் இதை ராஜகோபுரமாக்க வேண்டும் என்று சங்கல்பித்துக் கொண்டான். பின்னர் அவனது பிரயத்தனத்தினாலும் அவனது ஆசார்யன் நாவலபாக்கம் குமாரதாத தேசிகன் இன்னருளாலும், அந்த தேசத்தை ஆண்ட மன்னரும், பொது ஜனங்களும் லக்ஷ்மி நாராயணனுக்கு நிறைய பொருளுதவி தந்ததால், அதை பதினொரு நிலைகள் கொண்ட ராஜகோபுரமாக கட்டி முடித்தார்.

சிறிது நாள் கழித்து லக்ஷ்மி நாராயணன் ஒரு தீபாவளி அமாவாஸ்யையன்று கோயில் தூணோரமாக அமர்ந்த நிலையில் பரமபதம் எய்தினார். அவருடைய சரமத்திருமேனிக்கு க்ரியைகள் செய்ய, சொந்தங்கள் யாரும் இல்லாததால் ஊர் ஜனங்கள் அவரது திருமேனியை பள்ளி படுத்தினர்.

ஆனால் தம்மை தாய், தந்தையாக பாவித்து கைங்கர்யம் செய்த அந்த பக்தனுக்காக தாமே கைகளில் தர்ப்பைப்புல் ஏந்தி, பஞ்சபாத்திர-உத்ரணியில் தீர்த்தமும் எள்ளுடன் பிண்டம் வைத்து திதி கொடுத்தார் ஆராவமுதன்.

மறுநாள் கோயிலை திறந்த பட்டர் அதிர்ச்சியடைந்தார். உற்சவ மூர்த்தி பெருமாள் ஈர வஸ்த்திரத்துடன், அபர காரியங்களின் போது அணிவது போல பூணூலை வலமிருந்து இடமாக அணிந்திருக்க, ஆங்காங்கே தர்ப்பையும் எள்ளும் இறைந்திருந்தன. ஸ்ரார்த்தம் செய்தவர் முகம் எந்த அலங்காரமும் இல்லாமல் எப்படியிருக்குமோ அப்படியிருந்தது. பட்டாச்சார்யார் மயங்கினார். அசரீரி ஒலித்தது "லக்ஷ்மி நாராயணனான என் பக்தனுக்கு இனி நானே ஒவ்வொரு வருஷமும் ஐப்பசி தீபாவளி அமாவாஸ்யை அன்று ஸ்ரார்த்தம் செய்வேன், இதற்கு ஆவண செய்ய வேண்டுமென ஆக்ஞையிட்டார்."

நீத்தாருக்கு நெருங்கியவர் யாரும் இல்லாத நிலையில், என் பக்தன் என்னோடு நெருங்கிய ஸ்நேகம் கொண்டவன். பூவுலகை விட்டு அவன் மறைந்தாலும் வைகுந்தம் வரையில் அவனைத் தாங்கி செல்வேன் என பரந்தாமனே உறுதியோடு சொன்ன தலம் திருக்குடந்தை. இன்றளவும் ஐப்பசி மாத அமாவாஸ்யை திதியும், தீபாவளியும் இணையும் நாளில் கோமளவல்லி தாயார் சந்நிதிக்கு எதிரில் உள்ள ஸ்ரீகுமாரதாத தேசிகன் சந்நிதியில் ஸ்ரார்த்த கைங்கர்யம் நடைபெறுகிறது. சந்நிதி சாத்திய நிலையில், ஏகாந்தமாக சில அர்ச்சகர்கள் பெருமாள் திருநாமத்தை சொல்லி ஸ்ரார்த்தம் செய்கிறார்கள். பிறகு உச்சிகால பூஜை முடித்து கோயில் திறக்கப்படுகிறது, அதுவரை பக்தர்களுக்கு ஸேவை கிடையாது.

**"ஆராவமுதே அடியேனுடலம் நின் பாலன்பாயே**
**நீராயலைந்து கரைஉருக்குகின்ற நெருமாலே**
**சீரார் செந்நெல் கவரிவீசும் செழுநீர்த் திருக்குடந்தை**
**ஏரார்கோலம் திகழக்கிடந்தாய் கண்டேனெம்மானே"**

........ ஸ்வாமி நம்மாழ்வார் (திருவாய்மொழி)

# தீபாவளி கொண்டாடும் மாப்பிள்ளை ரங்கநாதர்



திருவரங்கத்தில் திவ்ய தம்பதியான அரங்கநாதன் தாமும் சிறப்புற மாப்பிள்ளை மிடுக்கோடு தீபாவளி கொண்டாடுகிறார்.

ஸ்ரீரங்கநாதர், பெரியாழ்வாரின் மாப்பிள்ளை அல்லவா, ஆண்டாளை மணம் செய்து கொடுத்த பெரியாழ்வார் அரங்கனின் மாமனார் ஆயிற்றே. வருடந்தோறும் அரங்கன் தீபாவளி கொண்டாடும் விதமே அலாதியானது தான்.

முதல் நாள் மாலை எண்ணெய் அலங்காரம், மேளதாளத்தோடு பெரிய பெருமாளுக்கு கண்டருளப் பண்ணுவர். மேலும் கோவில் சிப்பந்திகளுக்கு நல்லெண்ணெய், சீகைக்காய்த் தூள் ஆகியவையும் வழங்கப்படும்.

தீபாவளிக்கு முந்தைய நாள் இரவு நம்பெருமாளுக்கும் தொடர்ந்து ஆழ்வார்,


You can advertise for your Rental, Real Estate, Situation Vacant etc.,

**KODAMBAKKAM TIMES**

MAMBALAM & T NAGAR EDITION

COVERING AREA : Choolaimedu, Kodambakkam, Mambalam & T Nagar

K K NAGAR & VADAPALANI EDITION

COVERING AREA :
Ashok Nagar, Ramapuram, Virugambakkam & Valasaravakkam

Please contact : 044 2484 4114

E-mail : kodambakkamtimes@yahoo.com

# You can advertise for your Rental, Real Estate, Situation Vacant etc.,

**EDITION 1**

**COVERING AREAS**

Kodambakkam, T Nagar & Mambalam

**EDITION 2**

**COVERING AREAS**

Vadapalani, Ashok Nagar, K K Nagar,
Ramapuram & Virugambakkam

# KODAMBAKKAM TIMES

Our e-paper id : kodambakkamtimes.in

To advertisement in
KODAMBAKKAM TIMES
21/6, First Floor, Station Road,
West Mambalam, Chennai - 600 033.
Please contact 044 2484 4114
E-mail : kodambakkamtimes@yahoo.com



ஹர ஹர சங்கரா

ஆன்மீக இலவச புத்தகம்
மாதம் ஒரு முறை கிடைக்கும்
உங்கள் பிரதிகளுக்கு அணுகவும்

**SUNDAY HOLIDAY**

@ KODAMBAKKAM TIMES
ASHOK MANSION, 21/6, First Floor,
Mambalam Station Road,
West Mambalam, Chennai - 600 033.

ஆச்சாரியர் சந்நிதிகளுக்கு நல்லெண்ணெய், சிகைக்காய்த் தூள், விரலி மஞ்சள் ஆகியவை நம்பெருமாள் சார்பில் அர்ச்சகர் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

தீபாவளி அதிகாலை தாயார் மற்றும் ஆழ்வார், ஆச்சாரியர் சந்நிதிகளில் எண்ணெய் சார்த்தப்பட்டு திருமஞ்சனம் நடைபெறும்.

பின்னர் மூலவர், உற்ஸவருக்குப் புத்தாடை, மலர் மாலை அலங்காரம் முடிந்ததும் ஆழ்வார், ஆச்சாரிய உற்ஸவர்கள் பெரிய சந்நிதிக்குக் கிழக்கே உள்ள கிளிமண்டபத்தில் பெருமாள் வருகைக்காகக் காத்திருப்பர்.

அப்போது பெரியாழ்வாரும் மாப்பிள்ளை ரங்கநாதருக்காக தீபாவளி சீர் தரக் காத்திருப்பார். அப்போது நம்பெருமாள் சந்தனு மண்டபம் எழுந்தருள்வார்.

அங்கே திருமஞ்சனம் அலங்காரம் முடிந்தபின் பெரியாழ்வார் அரங்கனுக்கு தீபாவளி சீர் தரும் நிகழ்ச்சி நடைபெறும். பெரியாழ்வாரின் பிரதிநிதிகளாக அரையர்கள் சீர் வழங்குவர்.

நம்பெருமாள் திருவடிகளைச் சுற்றி சீர் வரிசையான நாணய மூட்டைகள் வைக்கப்படும். வேத பாராயணம், மங்கள வாத்தியம் முழங்க சீர் தரப்படும். இதை ஜாலி (சாளி) அலங்காரம் என்பர்.

நம்பெருமாளின் இந்த தீபாவளி தரிசனம் பக்தரின் வறுமை போக்கும். ஆடைகளுக்கும், பணவரவுக்கும் தட்டுப்பாடு இருக்காது என்பது நம்பிக்கை.

ரங்கா ரங்கா ஸ்ரீரங்கா சரணம் சரணம் ஸ்ரீரங்கா திருவடி சரணம் ஸ்ரீரங்கா

---

# ஒகேனக்கல் அஷ்ட புஜ நரசிம்மர்

பிரம்ம தேவர் காவிரியில் (ஒகேனக்கல்) யாகம் நிகழ்த்தினார் என்று ஒரு புராண செய்தி உண்டு அதனால்தான் அங்கே பிரம்ம குண்டம் என்று ஒரு இடத்தை காட்டுவார்கள்.

அங்கு யாகத்தை எல்லாம் முடித்த பிறகு அங்கிருந்து 20 கிலோமீட்டர் தள்ளி உள்ள அளேபுரம் என்கின்ற கிராமத்தில் ஸ்ரீ லட்சுமி நரசிம்ம ஸ்வாமியை பிரதிஷ்டைசெய்தார்.

இந்த கோவிலில் மிகப்பெரிய ஒரு ஆச்சரியமான விஷயம் என்னவென்றால் அஷ்ட புஜ நரசிம்மராக இங்கு பெருமாள் காட்சி அளிக்கிறார்.

ஒரு கையில் ஹிரண்யனின் தலைப்பாகத்தை அழுத்திப் பிடிக்கிறார், இன்னொரு கையால் அவனின் கால் பாகத்தை அழுத்திக் கொண்டிருக்கிறார், மற்ற இரண்டு கைகளால் வயிற்றில் கிழிக்கிறார், மற்ற இரண்டு கைகளால் அவன் வயிற்றில் இருந்து எடுத்த குடலை மாலையாக போட்டுக் கொள்கிறார், மேலும் உள்ள இரு கைளில் சங்கு சக்கரத்தை பிடித்திருக்கிறார்.

இப்படிப்பட்ட ஒரு காட்சியை பார்க்கும் பொழுது இது லட்சுமி நரசிம்மராக எப்படி இருக்க முடியும். இப்பொழுதுதான் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டிய ஹைலைட்டான விஷயம் ஒன்று உண்டு. ஆம் இங்கு உக்கிர நரசிம்மராகத்தான்

காட்சியளிக்கிறார். ஆனால் கோவிலுக்கு லட்சுமி நரசிம்மர் கோவில் என்று பெயர் சுவாமிக்கும் அதுதான் பெயர். எப்படி என்றால் கர்ப்ப கிரகத்திலே இருக்கும் உக்ர நரசிம்மருக்கு கீழே பாதாளத்திலே ஒரு அறை உண்டு அதற்கு சுரங்க வழியும் இருந்தது என்று சொல்லப்படுகிறது அங்கு லட்சுமி நரசிம்மராக அருள் பாலிக்கிறார் என்று கோவில் பட்டாச்சார் மூலம் அறிகிறோம் அதனால் தான் இங்கு சுவாமிக்கு வஸ்திரங்களை கொடுக்கும் பொழுது உடன் சேலையும் சேர்த்து கொடுக்க வேண்டும் இரண்டையும் சேர்த்து உக்கிர நரசிம்மராக இருக்கும் லட்சுமி நரசிம்மருக்கு சாத்துவார்கள்.

மேலும் மற்ற கோவில்களில் மஞ்சள் கலந்த நீரால் அபிஷேகம் செய்தால் இங்கு லட்சுமி இருக்கிறாள் என்கின்ற ஐதீகத்தால் குங்குமம் கலந்த நீராலும் அபிஷேகம் உண்டு.



அற்புதமான இந்த கோவிலில் நுழைந்த மாத்திரத்தில் நம்மை அறியாமல் மன அமைதி ஏற்படுகிறது. அது சென்று பார்த்தவர்கள் தான் யூகித்து அறிந்து கொள்ள முடியும். பாரத தேசத்தின் ஏன் உலகெங்கும் உள்ள பல பக்தர்களுக்கு இதுதான் குல தெய்வமாக விளங்குகிறது. வருடம் இரண்டு அல்லது மூன்று முறை ரத்னாங்கி சேவையாக இறைவன் காட்சி தருகிறான்.

பிரம்மோற்சவம் முடிந்த நிறைவு நாளான அன்று ரத்னாங்கி சேவையில் காட்சி தருகிறார். அஷ்டபுஜ நரசிம்மராக உக்ரத்தோடு விளங்கும் இந்த காட்சியில் அருகில் இரு கரம் கூப்பி பிரகலாதன் நின்றிருப்பதையும் கோவில் பட்டாச்சார் திரு விளக்கு வெளிச்சத்தில் காட்டுவார்.

மேலும் வெளியிலே முன் மண்டபத்திலே சீதாராமர் லக்ஷ்மணர் கோவிலும், அனுமனின் கருவறையும் உள்ளது. அதோடு கூட காலபைரவரும் இங்கு அருள் பாலிக்கிறார்.

தர்மபுரியில் இருந்து 37 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள இந்த கோவிலுக்கு பக்தர்கள் எப்பொழுதும் வந்து கொண்டே இருக்கிறார்கள். இங்கே தீர்த்தத்தை பிரோக்ஷணம் செய்து கொள்வது மன சஞ்சலம், மனோ வியாதிகள், குழப்பங்கள் ஆகியவற்றை போக்குகிறது என்பது பக்தர்களின் நம்பிக்கை.

**You can advertise for your Rental, Real Estate, Situation Vacant etc.,**

**KODAMBAKKAM TIMES**

**MAMBALAM & T NAGAR EDITION**

**COVERING AREA : Choolaimedu, Kodambakkam, Mambalam & T Nagar**

**K K NAGAR & VADAPALANI EDITION**

**COVERING AREA :**
**Ashok Nagar, Ramapuram, Virugambakkam & Valasaravakkam**

**Please contact : 9382682128**
**E-mail : kodambakkamtimes@yahoo.com**

# முடி காணிக்கை

கோவிலுக்கு நேர்ந்திருந்தேன் அதான் மொட்டை போட்டேன் என்று சொல்வார்கள். முடி வளர்றதாலதானே மொட்டை போட்டிருக்கே ... விரலை வெட்டுவியா என்று கிண்டலடிப்பார்கள். ஆனால் முடி காணிக்கை என்பது மரணத்துக்கு ஒப்பானது என்பது தெரியுமா?

மகாபாரத போர் நடக்கும் போது இறுதி நாளில் குரு துரோணாச்சாரியாரின் புதல்வன் அஸ்வத்தாமன் திரௌபதியின் ஐந்து குழந்தைகளையும் பாண்டவர்கள் என்று நினைத்து வெட்டி சாய்த்தான். விடிந்ததும் குழந்தைகளைக் கண்டு சொல்லொணா துயரம் அடைந்தார்கள் பாண்டவர்கள்.

இத்தகைய கொடூரச் செயலை செய்த பாதகனை வெட்டி வீழ்த்தாமல் விடமாட்டேன் என்று அர்ஜூனன் சபதமிட்டான். அன்று மாலையே கள்வன் அஸ்வத்தாமன் என்று தெரிந்து இழுத்துவரப்பட்டான்.



குருவின் மகனா என்று பாண்டவர்களும், திரௌபதியும் அதிர்ந்து போனார்கள். யாராக இருந்தால் என்ன இவன் தலையைக் கொய்யாமல் விடமாட்டேன் என்றான் அர்ஜூனன்.

அர்ஜூனனை யாராலும் தடுக்க முடியவில்லை. அப்போது அங்கு வந்த ஸ்ரீகிருஷ்ணர் "அவன் தலையை எடுக்க வேண்டுமென்பதில்லை அர்ஜூனா, அவன் சிகையை மழித்துவிடு. அது அவன் மரணத்துக்கு ஈடானது" என்றார்.

அதற்கு பிந்தைய நம் மூதாதையர்கள் தவறு செய்பவர்களை மொட்டை அடித்து செம்புள்ளி, கரும்புள்ளி வைத்து கழுதை மேல் ஊர்வலம் வரச் செய்ததையும் இத்தருணத்தில் நினைவுபடுத்தி பார்க்க வேண்டும்.

உங்கள் ஜாதகத்தில் கிரகங்கள் கடும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை அறிந்தாலோ, உங்களுக்கு மரணதசை நடக்கிறது என்பதை முன் கூட்டியே தெரிந்து கொண்டாலோ உங்கள் குலதெய்வம் அல்லது இஷ்ட தெய்வத்திடம் மொட்டை போடுவதாக முடி காணிக்கை செலுத்துவதாக வேண்டிக் கொள்ளுங்கள். தலை போகும் பேராபத்திலிருந்து தப்பித்துக் கொள்வீர்கள்.

பிறந்த குழந்தைக்கு 1, 3 என்னும் ஒற்றைப்பட வயதில் குலதெய்வ கோயிலில் பூஜை செய்து மொட்டை அடிப்பது வழக்கம்.

விஞ்ஞான ரீதியாக கருவில் இருக்கும் குழந்தை இரத்தம், மலம், சிறுநீர் போன்ற அழுக்குகள் சூழ இருக்கும். இந்த கழிவுகள் குழந்தையின் கேசம், மயிர் கால்கள் வழியாக வெளியேறுவதால் மொட்டை போடுவது அவசியமாகிறது. இல்லையெனில் அக்கழிவுகள் வழியாக நோய்கள் பரவும் அபாயமும் உண்டு என்கிறது விஞ்ஞானம்.

விஞ்ஞானத்திலும் மெய்ஞானத்திலும் மொட்டை போடுதல் ஆரோக்யமான வாழ்வுக்காகவே என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

# KRISHNA DELISH COFFEE




எங்களிடம் தரமான காபி
கொட்டை அரைத்து தரப்படும்

1 கிலோ காபி பவுடர்

ரூ 680 மட்டுமே

* Condition Apply

நம்ம ஆத்து காபி

FILTER COFFEE RS.15 only

COFFEE POWDER
DOOR DELIVERY FREE
ALSO AVAILABLE

No. 1 & 2 Murthy Street,
Arya Gowda Road, West Mambalam,
Next to Ayodhya Mandabam. Ch-33.

Ph : 9941578181
7010878478

Mylapore Ganapathy's 82 Years Anniversary Since 1942

# கொலு 2024

Mylapore Ganapathy's® Since 1942



**Oct | 03 - 12** நவராத்திரி மற்றும்

**Oct | 31** தீபாவளி வாழ்த்துகள்!

**MYLAPORE BRANCH**
# 14, Chitrakulam West Street,
(Near P.K.Mahal Kalyana Mandapam)
Mylapore, Chennai - 600 004
Tel : 044-2464 0292, 89390 27272

**WEST MAMBALAM BRANCH**
# 50, Arya Gowda Road,
(Near Shobanaa Kalyana Mandapam)
West Mambalam, Chennai - 600 033
Tel : 044-4856 6363, 89390 36363

Queries / Feedback : 044 - 4856 6781 WhatsApp : 73581 56781. Email : info@mylaporeganapathys.com

SHOP ONLINE www.mylaporeganapathys.com